www.agaram.lk

| | ரோயல் கல்லூரி –கொழும்பு - 7<br>Royal College – Colombo - 7 | | |
|---|---|---|---|
| | தரம்- 11<br>Grade- 11 | முதலாம் தவணைப் பரீட்சை - 2021<br>First Term Examination - 2021 | |
| | தமிழ் மொழியும் இலக்கியமும்<br>Tamil Language and Literature | 22 I | 1 மணி<br>1 Hour |

அறிவுறுத்தல்

❋ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.

❋ 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

❋ உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை x இடுக.

❋ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

- **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

01. “முழங்கு திரைப் புலனருவி” இங்கு **திரை** என்பது

(1) மறைப்பு (2) ஆடை (3) அலை (4) வரி

02. “பங்கப் பழனத் துழுமுழவர்” இங்கு **பங்கம்** என்பது

(1) தாமரை (2) பாதிப்பு (3) பங்கீடு (4) சேறு

03. “நாயனையார் கேண்மை தழீஇக் கொளல் வேண்டும்” **கேண்மை** என்பதன் எதிர்க்கருத்து

(1) கேட்காமை (2) நன்மை (3) தீமை (4) பகைமை

04.”நாவலர் அவர்களின் காசம் அவர்களுக்கு எதிர்பாராத **அனுகூலம்**” அளித்தது அனுகூலம் என்பதன் எதிர்கருத்து

(1) பிரதிகூலம் (2) நிர்மூலம் (3) ஊனம் (4) சகுனம்

05.”வாலைப் பருவ வாழை இலைகள்” **வாலை** என்பதன் ஒத்தக் கருத்துச் சொல்

(1) முதிர்ந்த (2) வாலுள்ள (3) காய்ந்த (4) இளைய

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க**

06. பின்வருவனவற்றுள் பொருத்தமற்ற சொற்களின் இணைவு
   (1) நெல் - அரிசி (2) கற்றாழை – சோறு (3) அவரை – பருப்பு (4) தோடை – சதை

07. "பக்குல் பறந்ததாகச் சிலமன் இல்லை"
   "அந்தக் கோப்பு இருந்த சிலமன்கூட இல்லை" இக்கூற்றுகளில் இடம்பெறும் சிலமன் என்னும் பேச்சுவழக்குச் சொல் உணர்த்தும் பொருள்
   (1) காட்சி (2) கேள்வி (3) சாட்சி (4) அறிகுறி

08. ஆபரணம், பாத்திரம், கப்பல் என்னும் பொருளைத் தரும் ஒரு சொல்.
   (1) அணி (2) ஆழி (3) கலம் (4) ஏனம்

09. "உலக சந்தையில் இலங்கைத் தேயிலைக்கு நல்ல டிமான்ட் (Demand) இருக்கிறது" டிமான்ட் என்பதற்கு நிகராகத் தமிழில் வழங்கும் கலைச்சொல்
   (1) பெறுமதி (2) கேள்வி (3) மதிப்பு (4) தேவை

10. ஒருவரின் அறிவுக்கூர்மையைச் சுட்டுவதற்குக் கையாளப்படும் அருஞ்சொற்றொடர்
   (1) ஒல்காப் பெரும்புகழ் (2) கருவிலே திருவுடையோன்
   (3) நுண்மான் நுழைபுலம் (4) சொல்லின் செல்வர்

11. பின்வருவனவற்றுள் இணைமொழி அல்லாதது
   (1) பச்சைப்பசேல் (2) தோட்டந்துரவு (3) சூதுவாது (4) இன்னார் இனியார்

12. உற்சாகமூட்டல் எனும் பொருள்தரும் மரபுத்தொடர்
   (1) தட்டிப்பறித்தல் (2) தட்டிக்கொடுத்தல் (3) தட்டிப்பேசுதல் (4) தட்டிப்பார்த்தல்

13. புதிதாக செய்யப்பட்ட தேர், கப்பல் என்பவற்றை முதன்முதலாக ஓட்டிப்பார்த்தலைக் குறிக்கும் மரபுச் சொல்
   (1) வெள்ளோட்டம் (2) ஒத்திகை (3) அரங்கேற்றம் (4) மேலோட்டம்

14. அரசனுடைய சபா மண்டபத்தைக் குறிக்கும் சொல்
   (1) அந்தப்புரம் (2) உப்பரிகை (3) நிந்தகம் (4) ஓலக்கம்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

15. தங்களைச் சார்ந்தவர்களின் குறைகள் பொருட்படுத்தவில்லை என்பதை உணர்த்தும் பழமொழி
   (1) இக்கரைக்கு மாட்டுக்கு அக்கரை பச்சை
   (2) காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு
   (3) இமைக் குற்றம் கண்ணுக்குத் தெரியாது
   (4) தனக்கு வந்தால்தான் தெரியும் தலைவலியும் காய்ச்சலும்

16. “சென்னை சர்வகலாசாலையார் முதன் முதலில் நடத்திய பீ.ஏ பரீட்சையில் இலங்கையைச் சேர்ந்த இருவர் சித்தியெய்தினர்” சர்வகாலாசாலை என்பது
   (1) சுவடிக்கூடம் (2) பாடசாலை (3) பல்கலைக்கழகம் (4) சட்டமன்றம்

17. ஐம்புலன்கள் எனப்படுபவை
   (1) மனம், புத்தி, சித்தம், அகங்காரம் (2) நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்
   (3) மெய், வாய், கண், மூக்கு, செவி (3) சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்

18. புலவர் தாம் சொல்ல வந்த விடயத்தை இயற்கை நிகழ்வொன்றில் ஏற்றிக் கூறுவது.
   (1) உயர்வு நவிற்சியணி (2) உவமையணி
   (3) தற்குறிப்பேற்ற அணி (4) சிலேடைஅணி

19. ஒலி, ஒழி, ஒளி என்பன முறையே தரும் பொருள்
   (1) சத்தம், முடித்துவிடு, மறை (2) சத்தம், மறை, முடித்தவிடு
   (3) மறை, முடித்தவிடு, சத்தம் (4) முடித்துவிடு, சத்தம், மறை

20. பொருளால் வேறுபட்டு நிற்கும் சொல்
   (1) பரிந்துரை (2) விதப்புரை (3) சிபாரிசு (4) நயப்புரை

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க**

21. உடனிலை மெய்மயக்கம் இடம் பெற்ற சொல்
   (1) கழுத்து (2) பந்து (3) மஞ்சு (4) அன்பு

22. வேற்றுமைப் பொருளால் வேறுபட்டமையும் தொடர்
   (1) எனது புத்தகம் (2) என் நண்பன் (3) மரவேர் (4) மேற்கு வீதி

23. “கேண்மை செய்து இன்புற்றனெம்
   செறிந்தன வளையே” இங்கு இன்புற்றனெம் என்பது
   (1) படர்கை வினைமுற்று (2) தன்மை வினைமுற்று
   (3) முன்னிலை வினைமுற்று (4) குறிப்பு வினைமுற்று

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

24. அகராதி ஒழுங்கில் அமையாத சொற்றொகுதி

(1) கரம், காரம், கொடை, கோடை (2) மனம், மீதி, மோதிரம், மௌலி

(3) வானம், வீதி, வேட்டி, வையகம் (4) கப்பல், சட்டி, கீரை, ஞானம்

25. பகுபத உறுப்புகளில் காலம் காட்டும் உறுப்பு அல்லாதது

(1) விகுதி (2) பகுதி (3) இடைநிலை (4) சாரியை

26. இருபெயரொட்டுப் பண்புத்தொகையாக அமைவது

(1) செந்தாமரை (2) பொதிகைமலை (3) பவளவாய் (4) வட்டமேசை

27. பின்வருவனவற்றுள் பெயரடை

(1) வேகமாக (2) வேகமாய் (3) வேகமான (4) வேகவேகமாய்

28. "கிட்டத்தட்ட" என்பதற்கு இணையான பிறிதொரு இணைமொழி

(1) ஏறக்குறைய (2) ஈடும்எடுப்பும் (3) சுமார் (4) அண்ணளவாக

29. அ. அமைச்சர் இன்று கூட்டத்திற்கு வரக்கூடும்

ஆ. கள்ளன் பிடிப்பட்டான்

இ. புலவர் காவியம் பாடினார்

ஈ. தொழிலாளி இன்று வேலைக்கு வரவில்லை

உ. சிறுவன் அடம் பிடித்தான்

இவற்றுள் ஆண்பாற் பெயர்களை எழுவாயாகக் கொண்ட வாக்கியங்கள் எவை?

(1) அ, ஆ, இ (2) அ, ஆ, உ (3) ஆ, இ (4) ஆ, உ

30. நான் அவரை எதிர்த்துப் பேசவில்லை

அவரது பேச்சில் நியாயம் இருந்தது

மேற்படி இரு வாக்கியங்களையும் இதே ஒழுங்கில் தர்க்க ரீதியாக இணைப்பதற்குரிய மிகப்பொருத்தமான இணைப்பிடைச் சொல்

(1) ஆகையால் (2) ஏனெனில் (3) ஆனாலும் (4) எனவே

- **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. சந்தேக நபர் வெளிநாடு செல்லத் தடை விதித்த நீதிபதி, அவரது ……………………………………... நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு நிபந்தனை விதித்து பிணையில் விடுதலை செய்தார்.

(1) அடையாள அட்டை (2) பிறப்புச் சான்றிதழை

(3) சாரதி அனுமதிப்பத்திரத்தை (4) கடவுச்சீட்டை

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

32. நூலாசிரியர் தான் எழுதிய நூலை மறைந்த தனது தாயாருக்கு........................................ செய்தார்.

(1) சமர்ப்பணம் (2) திறனாய்வு (3) அணிந்துரை (4) பிராயச்சித்தம்

33. வேலைக்கு ஆட்சேர்ப்பது தொடர்பான அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ விளம்பரம்....................... வெளிவந்துள்ளது.

(1) சுற்றுநிருபத்தில் (2) வெள்ளையறிக்கையில்
(3) பாராளுமன்றில் (4) வர்த்தமானியில்

34. எமது நாட்டில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றவர்......................................... முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொள்வார்.

(1) சபாநாயகர் (2) ஆளுநர் (3) பிரதமர் (4) பிரதம நீதியரசர்

- **வாக்கியங்களில் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க**

35. உரிய நேரத்தில் நோயாளியைக் கொண்டு வந்து சேர்த்திருந்தால் அவர் உயிர்...........................

(1) பிழைத்திருப்பார் (2) பிழைத்திருந்தார்
(3) பிழைத்திருக்கமுடியாது (4) பிழைத்தார்

36. வாரி வழங்குவதற்கு

(1) எல்லோரதும் மனம் வருமா? (2) எல்லோரினதும் மனம் வருமா?
(3) எல்லோராலும் மனம் வருமா? (4) எல்லோருக்கும் மனம் வருமா?

- **பின்வரும் பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

பாட்டினுக்கோர் புலவனென்றே தமிழ்நாடெங்கும்
பாராட்டும் பாரதியின் கவிதை ஆற்றல்
நாட்டிற்காம் விடுதலைப் போர் வெற்றியை ஊட்டி
நற்றமிழ்க்கும் மறுமலர்ச்சி நல்கக்கண்டோம்
வீட்டிற்குள் வீற்றிருந்தே கொள்கையின்றி
விண்ணப்பப் பதிகங்கள் விளம்புவோரை
ஏட்டிற்குள் கவிஞரென எழுதினாலும்
இறவாத கவிஞரையே உலகம் ஏற்கும்

37. இப்பாடலில் கவிஞர் கூற விரும்புவது

(1) பாரதியின் நாட்டுப் பற்றை (2) உண்மைக் கவிஞன் யாரென்பதை
(3) தமிழ்மொழியின் சிறப்புக்களை (4) நாட்டு விடுதலையை

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

38. பாரதி பற்றிய கவிஞரின் கூற்றுக்களில் பொருந்தாதது?
   (1) பாரதி கவிதை பாடும் ஆற்றல் மிக்கவன்
   (2) நாட்டு விடுதலைக்கு உரமூட்டியவன்
   (3) தமிழ் மறுமலர்ச்சியடைய வழிவகுத்தவன்
   (4) விண்ணப்பப் பதிகங்கள் விளம்பியவன்

39. "இறவாத கவிஞர்" எனக் கவிஞரால் கூறப்படுவோர்
   (1) சாகாவரம் பெற்ற கவிஞர்கள்
   (2) ஏட்டில் எழுதப்பட்ட கவிஞர்கள்
   (3) விண்ணப்பப் பதிகங்கள் விளம்பும் கவிஞர்கள்
   (4) வீட்டிற்குள் வீற்றிருந்து எழுதும் கவிஞர்கள்

40. **கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக் கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப்பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

அ. இதனால் புரவலர்கள் புலவர்களை ஆதரிக்கவில்லை.
ஆ. இக்காலத்தில் பொருள் வளமற்ற தன்மை காணப்பட, பஞ்சமும் பட்டினியுமே தலை விரித்தாடியது.
இ. சோழர்காலத்தை அடுத்து வரும் காலப்பகுதி நாயக்கர் காலமாகும்.
ஈ. புலவர்கள் ஆதரிக்கப்படாததனால் பைந்தமிழ் இலக்கியங்களையோ பாரகாவியங்களையோ படைக்க முடியாமற் போய் விட்டது.
உ அந்த வகையில் இலக்கிய வரலாற்றில் நாயக்கர் காலம் வரண்ட காலம் என அழைக்கப்படுகின்றது.

(1) இ, ஆ, ஈ, உ, அ
(2) இ, ஆ, ஈ, உ, அ
(3) இ, ஆ, இ, உ, ஈ
(4) இ, ஆ, அ, ஈ, உ

(40X1 = 40 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

| | ரோயல் கல்லூரி – கொழும்பு – 7<br>Royal College Colombo – 7 | | |
|---|---|---|---|
| | தரம் - 11<br>Grade- 11 | முதலாந் தவணைப் பரீட்சை - 2021<br>First Term Examination - 2021 | |
| | தமிழ் மொழியும் இலக்கியமும் II<br>Tamil Language and Literature II | 22 II | 2 மணி<br>2 hours |

கவனிக்குக:-
- ❋ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
- ❋ இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

Agaram.LK - Keep your dreams alive!

1. சுருக்கமான விடை எழுதுக.

I. பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.

மெலிந்தப் பிறைக்கும் விழி

II. “ஐயா வந்திடுவார் நீயும் அவரோடை இருந்து வடயத் தின்னன்” என்ற பேச்சு வழக்கு வாக்கியத்தை எழுத்து வழக்கு வாக்கியமாக மாற்றி எழுதுக.

III. “வேட்டை நாய் போல அவள் முன்னே ஓடிச் செல்கிறது நிழல்” இதில் பயின்றுள்ள அணி யாது?

IV. அப்பால் மூழ்கிற்று கதிர் நெடுங்கடலுள் - இவ்வாக்கியத்திலுள்ள எழுவாய், பயனிலைகளை எடுத்தக் காட்டுக.

V. பின்வரும் வாக்கியங்களை இணைத்து ஒரே வாக்கியமாக்குக.

அ. குமரன் கொழும்புக்குப் போனான்

ஆ. சாந்தன் கண்டிக்குப் போனான்.

VI. பின்வரும் வாக்கியத்தைப் பொருத்தமான நிறுத்தக்குறியீடு கொண்டு அமைக்குக.

சிறுமி என்னை இவ் அடக்குமுறையிலிருந்து காப்பாற்றுபவர்கள் யாருமில்லையா என அழுதாள்.

VII. “துணி” என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்கதாகத் தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.

VIII. உயர்ரக மலைநாட்டு முதல்தர தேயிலை இங்கு விற்பனைக்குண்டு

இவ்வாக்கியத்தின் பொருள் மயக்கத்தை நீக்கித் திருத்தமாக எழுதுக.

IX. சால, விலகி, சிறப்புடையது, நட்புமின்றி, தீயவர்களிடம் இருப்பதுவே, பகையுமின்றி - ஒழுங்கின்றிக்கிடக்கும் இச் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.



agaram.lk

www.agaram.lk

X. “இளங்கோ அடிகள், தமிழர் தழுவிய பழக்கவழக்கங்களையும் வழிபாட்டு முறைகளையும் கூறியுள்ளார்” மேற்படி செய்வினை வாக்கியத்தை செயற்பாட்டுவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

( 20 புள்ளிகள்)

2. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. **நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

(அ) சுற்றுலாப் பயணிகள் எமது நாட்டுக்கு வருவதால் பல நன்மைகள் உண்டு. எனவே அதிக எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகளை நாட்டிற்குள் கொண்டுவரும் முயற்சியில் அரசாங்கம் தீவிரமாகச் செயற்படுகின்றது. எமது நாட்டில் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய அம்சங்கள் பற்றியும் சுற்றுலாத் துறையை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது பற்றியும் உமது கருத்துக்கள் வெளிப்படுமாறு ஒரு **விளக்கக் கட்டுரை.**

ஆ) வைத்தியத் தொழில் என்பது கடவுள் சேவைக்குச் சமமானது. எமது நாட்டில் அரச, தனியார் வைத்திய நிலையங்களில் பல்லாயிரம் வைத்தியர்கள் சேவை செய்கின்றனர். அவர்களால் பல உயிர்கள் காப்பாற்றப்படுகின்றன. இது ஒரு புனிதமான தொழில். ஆனால் சிலர் இவ்வாறான சேவையைத் துஷ்பிரயோகம் செய்கின்றனர். சேவை மனப்பான்மையுடனும் அர்ப்பணிப்புடனும் கடமையாற்ற வேண்டிய கட்டுப்பாடு அவர்களுக்கு உண்டு எனும் கருத்துப்பட நீர் நிகழ்த்தும் **மேடைப் பேச்சு.**

(இ) சிக்கனம் என்பது மனித வாழ்விற்கு அவசியமானது. மனிதன் செம்மையாக வாழ்வதற்குப் பணம் இன்றியமையாதது. எனவே பணத்தைத் தேடுவது மட்டுமன்றி அதனைச் சிக்கனமாகவும் செலவு செய்ய வேண்டும். அத்துடன் நாம் அன்றாடம் பயன்படுத்துகின்ற அத்தியாவசியப் பொருள்களான நீர், மின்சாரம் போன்றவற்றையும் சிக்கனமாகப் பயன்படுத்தல் வேண்டும். மேலும், நேரத்தை விரயமாக்காது சிக்கனமாகப் பயன்படுத்துவதும் வாழ்க்கையின் உயர்வுக்கு இன்றியமையாததாகும். இக்கருத்துக்களை வெளிப்படுத்தும் வகையில் இருவருக்கு இடையிலான ஓர் **உரையாடல்.**

(ஈ) “அருணா ஆடைக்கைத்தொழில் நிறுவனம்” இலாபம் அதிகம் ஈட்டும் ஒரு வர்த்தக நிறுவனமாகும். எனினும் இங்கு தொழில்புரியும் ஊழியருக்கு இலாபத்தில் பங்கு கிடைப்பதில்லை. சுயநலப் போக்குடைய நிறுவன உரிமையாளர் ஊழியர் நலன் பற்றி அக்கறை கொள்வதில்லை. இந்நிறுவனத்தின் ஊழியர்களில் ஒருவனான முகுந்தன் பாதிக்கப்படும் சக ஊழியர்களின் உரிமைகளுக்காகப் போராடுகின்றான். இதனால் இவன் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதனைக் கதைக்கருவாகக் கொண்ட ஒரு **சிறுகதை**

(25 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

3. கீழே தரப்பட்டுள்ள உரைப் பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. **(சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)**

கல்வி நமக்குப் பல நன்மைகளைத் தருகிறது. கல்வியினால் நம் அறிவு வளர்கிறது. கல்வியால் நாம் தொழில் பெறுகிறோம். கற்றவர்களை உலகம் மதிக்கிறது. எல்லாவற்றிலும் மேலாகக் கல்வி நமக்குக் கடவுள் உண்மையை அறிவுறுத்தி நாம் கடவுளை அடையத் துணை செய்கிறது. கடவுளை வணங்கத் துணை செய்யாத கல்வி சிறந்த கல்வியாகாது. ''கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழா அர் எனின்'' என்பார் திருவள்ளுவர். கல்வியின் மூலம் கடவுளின் குண விசேடங்களையும், அவரை அன்பு செய்யும் முறைகளையும் அவரை அடைந்தோர் வரலாறுகளையும் அறிகிறோம். அவ்வாறு அறிவதனால் நமக்குக் கடவுளிடத்தில் அன்பு உண்டாகின்றது. அவ்வன்பு கடவுட் பணியில் நம்மை ஈடுபடுத்துகின்றது. கடவுட்கொள்கை இல்லாதவர்கள் கல்வியினால் கடவுள் நம்பிக்கையைப் பெறுகிறார்கள் கடவுட் கொள்கையுள்ளவர்கள் கல்வியினால் சமய வாழ்வில் ஊக்கம் அடைகின்றார்கள்.

கல்வியைப் போலவே கடவுட் கொள்கையைப் பெறுதற்கும் இளமைப் பருவமே ஏற்ற காலமாகும். இளமையிற் பழகிய பழக்கங்கள் எக்காலத்தும் நிலைத்து நிற்கும். ''தொட்டிலிற் பூண்ட குணம் சுடுகாடு மட்டும்'' என்று கூறுவார்கள். ஆதலினால், நமது பழக்க வழக்கங்களைச் சிறுவயதிலேயே திருந்தியனவாகக் கற்றுக் கொள்ள வேண்டும். கடவுள் நம்பிக்கையையும் கடவுள் தொண்டையும் இளமையிலேயே போதித்தால், அஃது ஒருவரது வாழ்க்கை முழுவதும் கலந்து நிற்கும். வாழைப்பழத்தில் இலகுவாக ஊசி ஏற்றுதல் போலச் சிறுவர் மனத்திலும் கடவுள் நம்பிக்கை நன்கு பதியும். அவ்வாறே நற்பழக்கங்களையும் இளமையிலே பழகிக் கொள்ளுதல் எளிதான காரியமாகும். இளமையிற் கற்றுக்கொள்ளாது வயது வந்தபின் நற்பழக்கங்களை மேற்கொள்ளலாமெனல் பொருந்தாது.

(10 புள்ளிகள்)

4. பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன்கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

பழந்தமிழ் இலக்கியச் சிறப்பியல்புகளுள் நம் கருத்தைக் கவரும் சிறந்த பண்பு 'ஒன்றே உலகம்' எனும் உயரிய மனப்பான்மையாம். வெண்டல் வில்கி என்ற அமெரிக்கா அறிஞர் எழுதி வெளியிட்ட ஒரே உலகம் (One World) என்னும் நூலை மக்கள் இனிதாக வரவேற்றனர். இந்நூற் கருத்தானது உலகம் தழுவியதாக இருந்ததால் இருபதாம் நூற்றாண்டில் ஏனையோர்க்குப் பெரு மகிழ்வு அளித்தது. இது பற்றி, தமிழராகிய நாம் சிறுபுன்முறுவல் அரும்பி நிற்கிறோம் ஏன்? இருபது நூற்றாண்டுகட்கு முன்னமே தமிழறிஞர் இதனை இனிது உணர்ந்திருந்தனர். இதற்கு ''யாதும் ஊரே யாவருங் கேளிர்'' எனும் பாடல் இடம்பெறும் புறநானூறு தக்க சான்றாகும். இவ்வுயர் பண்பு தமிழர்க்கு எங்ஙனம் அமைந்தது? பிறநாட்டினருடனான வணிகத்தின் பயனாகவும், மூவேந்தருடன் பிறநாட்டு மன்னர்க்கு உண்டான தொடர்பின் பயனாகவுமே பழந்தமிழர்க்கு இப்பரந்த மனப்பான்மை வாய்த்ததெனலாம்

மேலே எடுத்துக்காட்டிய ஒருலக மனப்பான்மையும், அதற்கு அடிப்படையான பரந்த நோக்கமும் மற்றொரு சிறந்த பண்புக்குக் காரணமாயின், இது கண்ணோட்டம் எனப்படும். இதனைப் பொறை எனலும் பொருந்தும். தமிழ்மொழி வரலாறு, நம் மக்களின் ஒப்பற்ற சமயப் பொறைக்குச் சான்றாக அமைந்துள்ளது. இலத்தீன் மொழி மேல்நாட்டுச் சமயங்களின் மொழி. சமஸ்கிருதம் இந்தியச் சமயங்களின் மொழி, ஆனால் பல சமயத்தவர்களும் உரிமை பாராட்டும் சிறப்பு தமிழ்மொழிக்கே உண்டு.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

I. 'ஒன்றே உலகம்' எனும் மனப்பான்மையைத் தமிழர் பழங்காலத்திலேயே பெற்றிருந்தமைக்கு ஆதாரமான நூல் யாது?

II. இம்மனப்பான்மையை, பழந்தமிழர் பெற்றுக்கொண்டமைக்கான காரணங்களாகக் கட்டுரையாசிரியர் எவற்றைக் கருதுகிறார்?

III. பொறை எனும் பண்புக்கு அடிப்படைகளாக அமைந்தவை எவை?

IV. பிறமொழிகளோடு ஒப்பிட்டு, தமிழ்மொழியின் எச்சிறப்பை ஆசிரியர் பாராட்டுகின்றார்?

V. தமிழரிடம் சிறுநகை தோன்றுவதற்கான காரணம் யாது?

(10 புள்ளிகள்)

5.

உமது கிராமத்தில் வங்கிகள் இன்மையால் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டியும், வங்கியொன்றை அமைத்துத்தருமாறு கோரியும் நிதியமைச்சரை விநயமாகக் கேட்டு 100 சொற்களில் அமையுமாறு ஓர் **கடிதம்** எழுதுக.

**அல்லது**

கொரோனா என்கின்ற ஆட்கொல்லி நோய் மிகத் தீவிரமாகப் பரவி வருவதால் அதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள் குறித்து, சுகாதார அமைச்சு பொதுமக்களுக்கு விடுக்கும் **துண்டுப்பிரசுரம்** ஒன்றினை 100 சொற்களில் அமையுமாறு எழுதுக.

agaram.lk

(15 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!

| | | | |
|---|---|---|---|
| ரோயல் கல்லூரி – கொழும்பு – 7<br>Royal College – Colombo – 7 | | | |
| தரம் - 11<br>Grade - 11 | முதலாந் தவணைப் பரீட்சை - 2021<br>First Term Examination - 2021 | | |
| தமிழ் மொழியும் இலக்கியமும் -பகுதி III<br>Tamil Language & Literature - Part III | 22 III | 2 மணி<br>2 Hour | |

**கவனிக்குக:**
- ❋ அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.
- ❋ 1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.
- ❋ இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

(1) சுருக்கமான விடை தருக.

**(i)** **பண்டு ஆண்ட வேந்தரை இழித்து**
**மேல் ஏறினான் தானும் ஏறினான்**

(அ) இக்கூற்று இடம் பெறும் நூல் எது?
(ஆ) இங்கு இருமுறை இடம் பெற்ற "ஏறினான்" என்னும் சொல் எவ்வெவ் பொருள்களில் வந்துள்ளது?

**(ii)** **"ஏமிரோ வோரி எத்துண்டி வஸ்தி என்றெல்லாம் இவரிடம் சாரசம் செய்தாள்"**
(அ) இக் கூற்று இடம்பெறும் சிறுகதை யாது?
(ஆ) இங்கு "இவர்" என்று குறிப்பிடப்பட்டவர் யார்?

**(iii)** **"ஆர் தட்டடினும் தட்டினும் தட்டு வராமலே அன்னதானத்திற்கு மார் தட்டிய துரை"**

(அ) இவ்வாறு சிறப்பிக்கப்படுபவர் யார்?

(ஆ) சிறப்பிப்பவர் யார்?

**(iv)** **"அல்லா மேல் ஆணை உன்னை அடையாட்டிக் காட்டுப்பள்ளி"**
(அ) அல்லா மேல் ஆணையாகக் கூறப்படும் விடயம் யாது?
(ஆ) "காட்டுப்பள்ளி" என்பதன் பொருள் யாது?

**(v)** **"கல்லா இளமை அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ"**
(அ) இப்பாடலடி இடம் பெறும் நூல் எது?
(ஆ) இவ்வடியின் மூலம் வெளிப்படும் உணர்வு யாது?

**(vi)** **"கதியிழக்கினுங் கட்டுரை யிழக்கிலோ மென்றான்**
**மதியிழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்"**
(அ) "கட்டுரை" என்ற சொல் இங்கு எதனைக் குறிக்கிறது?
(ஆ) இதனைப் பாடிய புலவரின் பெயர் யாது?



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

**(vii)** **“கணக்காய ரில்லாத வூரும் பிணக்கறுக்கு**
**மூத்தோரை யில்லா வவைக்களனும்”**

(அ) “கணக்காயர்” என்று குறிப்பிடப்படுவர் யார்?

(ஆ) “பிணக்கறுத்தல்” என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

**(viii)** **“வளந்தருவி வெட்டும் இளந்தாரிமாரை**
**நாவூறு வாராமற் காரும் ஐயனாரே”**

(அ) இப்பாடல் எத்தொழிலோடு தொடர்புபட்டது?

(ஆ) இப்பகுதியில் இடம்பெற்றுள்ள கிராமிய நம்பிக்கை யாது?

**(ix)** **“மாத மூன்று மழையுள்ள நாடு**
**வருஷ மூன்று விளைவுள்ள நாடு”**

(அ) இங்கு குறிப்பிடப்படும் நாடு யாது?

(ஆ) விளைவு என்பது எதனைக் குறிப்பிடப்படுகிறது?

**(x)** **“ஆடிக்குடத்தடையு மாடும் போதே இரையும்**
**மூடித் திறக்கின் முகங்காட்டும்…..”**

(அ) இதில் கையாளப்பட்டுள்ள அணி யாது?

(ஆ) அந்த அணி மூலம் தொடர்புபடுத்தப்படுபவை எவை?

(10 x 2 = 20 புள்ளிகள்)

(2) பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

**(i)**
**என்றலுமே அடியின்மிசை நெடிது வீழ்ந்து**
**அழுவானை இவன் யார் ? என்று**
**கன்று பிரி காராவின் துயருடைய**
**கொடிவினவ கழல்கால் மைந்தன்**
**இந்துணைவன் இராகவனுக்கு இலக்குவற்கும்**
**இளையவற்கும் எனக்கும் மூத்தான்**
**குன்றனைய திருநெடுந் தோள்குகன்**
**என்பான் இந் நின்ற குரிசில் என்றான்**

(அ) இப்பாடல் இடம் பெற்ற சந்தர்ப்பம் யாது?

(ஆ) “கன்றுபிரி காராவின் துயருடைய கொடி” என்று குறிப்பிடப்பட்டவர் யார்? அவ்வாறு குறிப்பிடப்பட்டதன் பொருத்தப்பாட்டைச் சுருக்கமாகத் தருக.

**(ii)**
**உப்பில்லாக் கஞ்சியினை உண்ணும் அறுசுவைபோல்**
**தப்பிய கந்தை பீதாம்பரம் போல் - ஒப்பும்**
**பனையோலைப் பாயில் படுத்துறங்கும் வாழ்வார்**
**மனங் கொண்டது மாளிகை**

(அ) இப்பாடல் மூலம் புலவர் கூற விழையும் பிரதான கருத்து யாது?

(ஆ) அதனை எவ்வாறு வெளிப்படுத்துகின்றார்?



agaram.lk

**(iii)** **தச்சன் செய்த சிறுமா வையம்**
**ஊர்ந்து இன்புறாஅர் ஆயினும் கையின்**
**ஈர்த்து இன்புறூஉம் இளையோர் போல்**
**உற்று இன்புறேஎம் ஆயினும் நற்றேர்ப்**
**பொய்கை ஊரன் கேண்மை**
**செய்து இன்புற்றனெம் செறிந்தன வளையே**

(அ) இச் செய்யுளின் திணை, துறை, என்பவற்றைத் தருக.
(ஆ) இச் செய்யுளின் மையக்கருத்து யாது?

**(iv)** **ஒரு பார்வையில் எண்ணும் "அட்ச இருதயம்" என்ற கலையை அவன் படித்திருந்தான். இந்தக் கம்பியூட்டரும் அப்படித்தான். அட்ச இருதயக் கலையில் கைதேர்ந்ததாக இருந்தது. ஆனால் இதையெல்லாத்தையும் சாப்பிடக் கூடிய ஓர் அதிசயத்தை அது எனக்காக அந்தரங்கமாக வைத்திருந்தது. அப்போது நான் அதனுடைய வஞ்சகத்தையும் சூழ்ச்சியையும் கண்டு கொள்ளவில்லை.**

(அ) அவன் என்று குறிப்பிடப்பட்டது யாரை? அட்ச இருதயக் கலை என்றால் என்ன?
(ஆ) "அப்போது நான் அதனுடைய வஞ்சகத்தையும் சூழ்ச்சியையும் கண்டு கொள்ளவில்லை" எனச் சிறுகதை ஆசிரியர் கூறக் காரணம் என்ன?

**(v)** **இலட்சிய வாதிகள் தாமும் ஈடேறிப் பிறரையும் ஈடேற்றும் தனித்தன்மை வாய்ந்தவர்கள். இலட்சியங்களுக்குள்ளே நாம் ஒருமைப் பாட்டினைக் காண வேண்டும். இலட்சியவாதிகளுள்ளும் நாம் ஒருமைப்பாட்டைக் காண வேண்டும். இலட்சியவாதிகளும் தம்முள்ளே ஒருமைத் தன்மை வாய்ந்தவர்கள். ஆதலின் இலட்சியங்களுக்குள்ளே இது நிறைந்தது அது குறைந்தது என உயர்வு தாழ்வு கற்பித்தல் ஆகாது. இவ்வாறு கற்பிப்போர் சமூகத்தின் அடிப்படை அமைப்பினை நிலைகுலையச் செய்கின்றவராவர்.**

(அ) இவ் உரைப்பகுதியில் இலட்சியவாதிகள் பற்றிக் கூறப்பட்டுள்ளவற்றைத் தருக.
(ஆ) சமூகத்தின் அடிப்படை அமைப்பை நிலைகுலையச் செய்பவர்கள் எத்தகையவர்கள் எனக் கூறப்பட்டுள்ளது?

(5x 4= 20 புள்ளிகள்)

**(3) "கம்பராமயணம் குகப்படலத்தில்"**
(அ) கோசலை, சுமித்திரை ஆகியோர் புகழ்ந்துரைக்கப்படுமாற்றினையும்
(ஆ) கைகேயி இகழ்ந்துரைக்கப்படுமாற்றினையும்
விவரிக்குக.

(15 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

**அல்லது**

**நீதிப் பாடல்கள் என்னும் பாடப்பகுதியில் காணப்படுகின்ற**

அ) விவேகசிந்தாமணி, வெற்றிவேற்கைப் பாடல்களில் கூறப்பட்டுள்ள நீதிக்கருத்துக்களையும்
ஆ)அவை வாழ்க்கை நெறிமுறைகளுக்கு பயன்படுமாற்றினையும்
தெளிவுறுத்துக.

(15 புள்ளிகள்)

**(4) “நாவலர் எழுந்தார் என்னும் கட்டுரையில்”**

(அ) நாவலரின் எழுச்சிக்கு முன்னரான வாதச் சமரும்
(ஆ) நாவலரின் எழுச்சிக்கு பின்னரான களநிலைவரமும்
பண்டிதமணி அவர்களால் எடுத்துரைக்கப்பட்டிருக்குமாற்றினை
விவரிக்குக.

**அல்லது**

**“இலட்சியமும் சமநோக்கும் என்னும் கட்டுரையில்”**

(அ) இலட்சியத்தைக் கடைப்பிடிப்பதால் ஏற்படும் நன்மைகளும்
(ஆ) இதிகாசப் பாத்திரங்கள் தத்தம் இலட்சியங்களில் நின்றொழுகிய விதமும்
கூறப்பட்டிருக்குமாற்றினைத் தெளிவுறுத்துக.

(15 புள்ளிகள்)

**❈ 5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.**

**(5) “திருக்குறள் பேதைமை அதிகாரத்தில்”**
(அ) பேதையின் இயல்புகளும்
(ஆ) பேதை கைப்பட்ட செல்வத்தின் நிலையும்
திருவள்ளுவரால் எடுத்துரைக்கப்படுமாற்றினைத் விவரிக்குக.

(10 புள்ளிகள்)

**(6) “எது நல்ல சினிமா என்ற கட்டுரையில்”**
(அ) காட்சிப் படிமங்கள்
(ஆ) ஒலி
(இ) படத்தொகுப்பு
ஆகியவற்றினூடாக சினிமா உருவாகுமாற்றை கட்டுரையாசிரியர் எவ்வாறு எடுத்துக்காட்டுகின்றார்?.

(10புள்ளிகள்)

**(7) “நாட்டார் பாடலில்”**
(அ) ஏர் பாடலில் வெளிப்படும் உழவனின் பரந்த மனப்பாங்கும்
(ஆ) காதற் பாடலில் காதலன் காதலி மீது கொண்ட ஆழமான காதல் உணர்வும்
வெளிப்படுமாற்றினைத் தெளிவுறுத்துக.

(10 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk